IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

OS No. 198/2023

**D.W.1**

| | |
|---|---|
| Name | : மாதவன் |
| Father/Husband Name | : முத்துகிருஷ்ணன் |
| Place | : சுளேரிகாடு |
| Calling | : |
| Age | : 59 |
| Date | : 04–02–2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.02.2026.

சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

2. என்னுடைய சகோதரிகளான வாதிகள் என் மீதும் என்னுடைய சகோதரர் மற்றும் அம்மா ஆகியோரின் மீது பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதி இறந்து விட்டதால் அவருடைய வாரிசுகளை 8 முதல் 12 பிரதிவாதிகளாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். என் அம்மாவும் வழக்கு நிலுவையில் இருந்த போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னுடைய அம்மாவிற்கு வாதிகளும் நானும் என்னுடைய சகோதரரும் மட்டும்தான் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா 1 முதல் 6 இலக்க சொத்துக்கள் விவசாய நிலங்கள் என்றாலும் 7 ஆம் இலக்க சொத்து குடியிருப்பு மனை என்றாலும் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பதில் உரையில் ஒன்று முதல் ஆறு

இலக்க சொத்துக்களை கிரையம் கொடுத்து விட்டதாகவும் ஏழாம் இலக்கச் சொத்து மட்டும் தான் எங்கள் வசம் உள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

3. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் என் அப்பாவின் சொத்துக்கள் இல்லை என்றாலும் அவை பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களில் என் உடன் பிறந்தவர்களுக்கும் பாகம் உண்டு என்றால் சரிதான். ஒன்றாம் வாதியின் திருமண செலவிற்காக கொஞ்சம் சொத்துக்களை விற்பனை செய்ததாக என்னுடைய பதிலுரையில் சொல்லி உள்ளேன் என்றாலும் எப்போது எந்த புல எண்ணிற்குட்பட்ட சொத்துக்களை எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்தோம் என்ற விவரங்களை குறிப்பிடவில்லை என்றாலும் அதன் கிரைய ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். ஒன்றாம் வாதியின் திருமண செலவிற்காக கொஞ்சம் சொத்துக்களை விற்பனை செய்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

4. என் அப்பாவின் காலத்தில் அந்த சொத்துக்களை விற்றோமா அல்லது நான் விற்பனை செய்தேனா என்றால் நான் தான் விற்பனை செய்தேன். நான் ஒன்றாம் வாதியின் திருமண செலவிற்காக ஏற்பட்ட கடனிற்காக தான் அதை விற்பனை செய்ததாக சொல்கிறேனா என்றால் ஆமாம். ஆனால் கடனுக்காக தான் அவற்றை விற்பனை

செய்ததாக என்னுடைய பதிலுரையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் விற்பனை செய்ததாக சொல்லும் சொத்துக்களின் கிரைய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எனக்கு விரோதமாக ஆகிவிடும் என்பதால் தான் நான் அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஒன்றாம் வாதியின் திருமணத்திற்காக யாரிடம் எவ்வளவு தொகையை கடனாக பெற்றேன் என்றால் காட்டுக்குப்பத்தை சேர்ந்த நேசமணி என்பவரிடம் ரூ.1,20,000/- கடன் பெற்றேன்.

5. அதை எப்போது பைசல் செய்தேன் என்றால் 1991 ஆம் ஆண்டு பைசல் செய்தேன். நேசமணிக்கும் எனக்கும் விரோதம் ஏதும் இல்லை என்றால் சரிதான். நேசமணி என்பவரிடம் ரூ.1,20,000/- கடன் பெற்றதாக என்னுடைய பதில் உரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அவரிடம் கடன் பெற்றதற்கு ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. தாவா 1ஆம் இலக்க சொத்தை இரண்டாம் பிரதிவாதியின் திருமணத்திற்காக கிரயம் கொடுத்ததாக என்னுடைய பதில் உரையில் சொல்லி உள்ளேன் என்றாலும் எப்போது அதை கிரயம் கொடுத்தேன் என்றால் 1994 ல் கிரையம் கொடுத்தேன். அதற்கும் எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. இரண்டாம் இலக்க சொத்தை விற்பனை செய்து இரண்டாம் வாதிக்கு திருமணம் செய்ததாக என்னுடைய பதிலுரையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் எவ்வளவு தொகைக்கு கிரயம் கொடுத்தேன் என்றால் ரூ.1,60,000/–க்கு கிரையம் கொடுத்தேன். ரூ.1,50,000/– செலவானது. அந்த ஆவணங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு எவ்வளவு செலவானது என்பதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய பதிலுரையில் இரண்டாம் வாதியில் திருமணத்திற்காக ரூ.90,000/– செலவு செய்ததாக குறிப்பிட்டிருந்தால் அது தவறு தான் என்றால் சரிதான். இரண்டாம் வாதிக்கு 5 சவரன் தங்க நகைகள் வாங்கி கொடுத்ததாகவும் சொல்லி உள்ளேன் என்றாலும் அதற்கான ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. நான் என்னுடைய பதிலுரையில் பொய்யான சங்கதிகளை சொல்லி உள்ளேன் என்றாலும் எனவே அவை வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் என்னுடைய திருமணத்திற்கு ரூ.50,000/– கடன் பெற்றதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். யாரிடம் கடன் பெற்றேன் என்றால் சுளேரிகாட்டில் உள்ள வரதராஜன் என்பவரிடம் பெற்றேன். அதற்கான ஆவணங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வரதராஜன் எனக்கு விரோதம் இல்லையென்றால் சரிதான். நான் கடன் ஏதும் பெறவில்லை என்றாலும் நான் குறிப்பிட்ட சொத்துக்களை

என் விருப்பம் போல் நான் விற்பனை செய்து செலவழித்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா இலக்க நான்காம் சொத்து குடும்ப சொத்து இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் ஆனால் வாதிகள் தரப்பில் அவை குடும்ப சொத்து என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளார்கள் என்றால் அது எங்கள் குடும்ப சொத்து தான்.

8. நான் தாவா மூன்று மற்றும் ஆறு இலக்க சொத்துக்களை பனையூர் அமான் பாய் என்பவருக்கு கிரையம் கொடுத்து விட்டேனா என்றால் ஆமாம். எவ்வளவு கிரயம் கொடுத்தேன் என்றால் ரூபாய் 5 லட்சத்திற்கு கிரயம் கொடுத்தேன். அந்த பணத்தை நான் என்ன செய்தேன் என்றால் அம்மாவிற்கு வீடு கட்டி கொடுத்தேன். அதை விற்பனை செய்வதற்கான கிரைய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஐந்தாம் இலக்க சொத்தை என்னுடைய தாய்மாமா வரதராஜன் என்பவருகக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். எவ்வளவு தொகைக்கு கிரயம் கொடுத்தேன் என்றால் ரூ. 90,000 க்கு கொடுத்தேன். நான் என்னுடைய சொந்த விருப்பத்திற்கு ஏற்றார் போல் கூட்டு குடும்ப சொத்தை கிரையம் கொடுத்துள்ளேன் என்றாலும் அவை வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அந்த சொத்துக்கள் அனைத்திலும் வாதிகளுக்கு பாகம் உள்ளது என்றால் சரியல்ல.

9. நான் தாவா ஏழாம் இலக்க சொத்தில் எந்த ஆண்டு வீடு கட்டினேன் என்றால் 1996 ஆம் ஆண்டு கட்டினேன். என்ன வீடு என்றால் அது சீமை ஓடு போட்ட வீடு. அப்போது என்ன செலவானது என்றால் ஆறு லட்சம் செலவானது. என்னுடைய பதிலுரையில் அந்த வீட்டை எப்போது கட்டினேன் என்பதையும் எவ்வளவு செலவானது என்பதையும் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த வீடு எங்கள் பூர்வீக வீடு என்றாலும் நானும் என்னுடைய உடன்பிறந்தவர்களும் அந்த வீட்டில் தான் பிறந்தோம் என்றாலும் வழக்கிற்காக நான் கட்டியதாக பொய்சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதே வீட்டுமனையில் இரண்டாம் பிரதிவாதியும் வீடு கட்டி உள்ளாரா என்றால் ஆமாம். எப்போது கட்டினார் என்றால் 1997 ஆம் ஆண்டு கட்டினார்.

10. நானும் என்னுடைய தம்பியும் தான் அந்த வீடுகளை கட்டினோம் என்பதற்கான எவ்வித ஆவணங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வீட்டுமனைகளிலும் வாதிகளுக்கு பாகம் உள்ளது என்றாலும் அதை தவிர்ப்பதற்காக தான் நானும் என்னுடைய தம்பியும் வீடு கட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனவே என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வில்லங்கச் சான்று உள்ளிட்ட ஆவணங்கள் அடிப்படையில் வாதிகளுக்கு சேர வேண்டிய பாகப்பிரிவினையை நான் கொடுப்பதை தவிர்க்க முடியாது என்றால் சரியல்ல. தாவா படி முதல் நிலை தீர்ப்பு பெறுவதற்கு வாதிகளுக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. நான்

வீண் எதிர் வியாஜியம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் இரண்டாம் பிரதிவாதியின் வாரிசுகளான 8 முதல் 12 பிரதிவாதிகளுக்கும் எவ்வித தகராறும் இல்லையென்றால் சரிதான். என்னுடைய அம்மா மூன்றாம் பிரதிவாதியும் இறந்து விட்டதாலும் அவருடைய பாகமும் தலா ¼ பாகம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

NILAVARASAN KASI Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,

Thiruporur.